(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 97.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

## 2021 ஒக்டோபர் 05, செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

257/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள, விளையாட்டுச் சங்கங்களில், கடந்த 03 வருட காலத்தில் உரிய முறையில் கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள விளையாட்டுச் சங்கங்களின் பெயர்கள் மற்றும் எண்ணிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய சங்கங்களின் நிதி நிருவாகத்தை ஒழுங்குறுத்த அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

283/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் மனித நுகர்விற்கு உகந்த கிழங்கு வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கிழங்குகளில் காணப்படும் போசாக்குத் தன்மை தொடர்பில் முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கிழங்கு வகைகளுள் இலங்கைக்கே தனித்துவமான கிழங்கு வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்ளூர் கிழங்குகளில் போசாக்கு மற்றும் மூலிகைத் தன்மை அதிகம் என்பதையும்;

(ii) காடழிப்பு மற்றும் இரசாயனப் பசளை பயன்பாட்டின் காரணமாக மேற்படி கிழங்கு வகைகள் அரிதாகி உள்ளதென்பதையும்;

(iii) அவற்றுள் சில கிழங்கு வகைகள் தற்போது அழிந்து விட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) உள்ளூர் கிழங்கு வகைகளை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உள்ளூர் கிழங்கு வகைகளை ஏற்றுமதி செய்வதற்கும் அது சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் திட்டங்கள் உருவாக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

512/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமைச்சு திட்டமொன்றைத் தயாரித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக பாடசாலைகளைத் தெரிவு செய்கையில் பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் தேசிய பாடசாலை முறைமையை முறைசார்ந்ததாக்குவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

616/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் வரையான காலப்பகுதியில் பாதுகாப்புச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கூட்டங்களில் பங்கேற்றோர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பாதுகாப்புச் சபை கூட்டங்களில் சட்ட ரீதியாக பங்கேற்பதற்கு உரித்துள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காணப்பட்ட சம்பிரதாயத்துக்கு முரணாக மேற்படி காலப்பகுதியில் பல்வேறு நபர்கள் பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

764/2020

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் கல்வி முறைமையை வலுப்படுத்த முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஒரு தேசிய பாடசாலையேனும் இல்லாத பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) புதிய தேசிய பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) அத்தகைய பாடசாலைகள் எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

792/2020

கௌரவ ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் வதியும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாத்தளை மாவட்டத்தில் பயிற்செய்கை நிலங்களில் தற்போது ஆக்கிரமிப்புத் தாவரங்கள் பரவி வருகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது மாத்தளை மாவட்டத்தின் விவசாயிகளுக்கும் அவர்களின் பயிற்செய்கை நிலங்களுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மாத்தளை மாவட்டத்தில் பயிர்ச்செய்கை நிலங்களில் ஆக்கிரமிப்புத் தாவரங்கள் பரவுவதைத் தடுத்து நிறுத்தி விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

977/2020

கௌரவ வேலு குமார்,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடுதும்பர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள நக்கல்ஸ் மலைத் தொடரிலுள்ள நக்கல்ஸ் வன ஒதுக்கத்தை எல்லைப்படுத்தும் பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து எத்தனை அடி உயரம் கொண்டதென்பதையும்;

(ii) மேற்படி எல்லைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் உள்ளடங்கியுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நக்கல்ஸ் வன ஒதுக்கத்தில் குடியேற்றங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு குடியேற்றங்களிலும் வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நக்கல்ஸ் வன ஒதுக்கத்தில் தனியார் காணிகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) இக்காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகள் அல்லது இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

989/2020

கௌரவ ரோஹன பண்டார,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பொது நூலகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நூலகத்திற்குமென அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒவ்வொரு பதவிப் பெயரின் பிரகாரம் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பதவிகளுக்கு தகைமைமையற்ற ஆட்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிலைமையினை சீராக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1202/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தபால் திணைக்களத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் உப தபால் நிலையப் பொறுப்பதிகாரிகள் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டனர் என்பதையும்;

(ii) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இற்கு அமைவாகவும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலாக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கு ஏற்பவும் இவர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் – II தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முகாமைத்துவ உதவியாளர் சேவையின்-II ஆம் தர பதவிகளில் சேவையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் தபால் திணைக்களத்தில் சேவையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்படும் பிரசவ விடுமுறை, வருடாந்த விடுமுறை, மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் அலுவலக வசதிகள் போன்ற சிறப்புரிமைகள் மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இது தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1863/2021

கௌரவ பிரேமலால் ஜயசேகர,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரிக்காக நிறைவேற்றப்படும் வகிபங்கு யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் பிரதேச அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வலுவலகங்கள் அமைந்துள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த ஒவ்வொரு பிரதேச அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை மேற்படி ஒவ்வொரு பிரதேச அலுவலகத்தினாலும் செயற்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் அமைச்சிடமிருந்து கோரப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கென பிரதேச அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களினாலும் சேவை வழங்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவானது நியாயமான முறையில் பங்கிடப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்த முடியுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களால் 2021 செப்தெம்பர் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் கீழ், பெறுமதி சேர் வரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 மே 20 ஆம் திகதிய 2228/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி அமைச்சர்,— பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் கீழ், பெறுமதிசேர் வரி விலக்களிக்கப்படும் தொழில்நுட்பவியல் மற்றும் இயன்றனவாக்கப்பட்ட சேவைகளைக் குறித்துரைத்து நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 யூன் 29 ஆம் திகதிய 2234/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 194 ஆம் பிரிவின் கீழ், வருமான வரி விலக்களிக்கப்படும் தொழில்நுட்பவியல் மற்றும் இயன்றனவாக்கப்பட்ட சேவைகளைக் குறித்துரைத்து நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 யூன் 29 ஆம் திகதிய 2234/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 194 ஆம் பிரிவின் கீழ், பரிமாற்று விலைநிர்ணய ஒழுங்குவிதிகள் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மார்ச் 02 ஆம் திகதிய 2217/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 6(2) ஆம் பிரிவின் கீழ், தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்களுக்கான அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 10 ஆம் திகதிய 2227/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

தொழில் அமைச்சர்,— ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2021.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

கைத்தொழில் அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14(1)(ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுடன் உடன் வாசிக்க வேண்டிய, 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2221/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

நீதி அமைச்சர்,— குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 214 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 840 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 யூலை 02 ஆம் திகதிய, 2234/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08) [1].

* 15.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

17.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

816/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் அமைந்துள்ள போதனா வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், பிரதேச /ஆதார வைத்தியசாலைகள் மற்றும் சுற்றயல் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நாளாந்தம் சிகிச்சை பெறும் வெளி நோயாளர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்குமென அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி;

(iv) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இன்றளவில் நிலவும் பணியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி (அ) (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வெற்றிடங்கள் எப்போது நிரப்பப்படும் என்பதை தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நாளாந்தம் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் உள்ள கட்டில்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அக்கட்டில்களின் எண்ணிக்கை போதுமானதா என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைகளில் இன்றளவில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறைக்கான தீர்வு எப்போது வழங்கப்படும் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

2490/2021

கௌரவ கே. சுஜித் சஞ்சய பெரேரா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டியாந்தோட்டை பிரதேசத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான நாகஸ்தென்ன தோட்டம் என்ற பெயரில் ஒரு தோட்டம் உள்ளதென்பதையும்;

(ii) அத்தோட்டத்தில் 1000 கும் மேற்பட்ட ஏக்கர்களை சில தனியார் வியாபாரி களுக்கு விற்பனை செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அதற்காகப் பின்பற்றப்படும் நடவடிக்கைமுறை யாது;

(ii) எட்டியாந்தோட்டை பிரதேச மக்களுக்கு ஒரு சொத்தாக அமைந்துள்ள மேற்படி தோட்டத்தை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் வைத்துக்கொண்டு அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?